**අධ්‍යාපනය, ශ්‍රම බලකාය සහ මානව ප්‍රාග්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

වෙත යොමු කරන ලද

**ක්‍රීඩාවල යෙදීමේ දී උත්තේජක ද්‍රව්‍ය ගැනීමට එරෙහි සම්මුති (සංශෝධන) පනත් කෙටුම්පත**

සම්බන්ධයෙන්

**අධ්‍යාපනය, ශ්‍රම බලකාය සහ මානව ප්‍රාග්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

**අධ්‍යාපනය, ශ්‍රම බලකාය සහ මානව ප්‍රාග්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු හේෂා විතානගේ අංකුඹුර ආරච්චි මහතා, පා.ම. විසිනි**

**2025 ඔක්තෝබර් මස 07 වැනි අඟහරුවාදා**

-----------------------------------------------------------------------------

**கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட**

விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் மீதான

**கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை**

கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி, பா.உ. அவர்களால்**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

2025 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை.

-----------------------------------------------------------------------------

# Report of the
# Sectoral Oversight Committee on Education, Manpower and Human Capital
# on
# Convention against Doping in Sport (Amendment) Bill

**referred to**

**Sectoral Oversight Committee on Education, Manpower and Human Capital**

**Presented to Parliament by**

**Hon. Hesha Withanage Ankumbura Arachchi, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Education, Manpower and Human Capital**

**Tuesday, 07 October 2025**

**குழுவின் அறிக்கை**

2025 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பின்வரும் சட்டமூலம் பரிசீலிக்கப்பட்டது.

- **விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயம் (திருத்தச்) சட்டமூலம்**
  (இது 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டமூலமாகும்)
  (2025 செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**கலந்துகொண்ட குழுவின் அங்கத்தவர்கள்**

- கௌரவ சுனில் ராஜபக்ஷ, பா.உ. (தற்காலிகத் தவிசாளர்)
- கௌரவ சட்டத்தரணி (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே, பா.உ.
- கௌரவ சுகத் வசந்த த சில்வா, பா.உ.

**குழுவின் செயலாளர்**
திருமதி. எஸ்.டப்ளியூ.டி.ஆர். த சில்வா, பிரதான உத்தியோகத்தர், துறைசார் மேற்பார்வைக் குழு அலுவலகம்

**கலந்துகொண்ட அதிகாரிகள்**

**இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு**
திரு. ஏ.எச்.எம்.யூ. அருண பண்டார, செயலாளர்

**அபிவிருத்திப் பிரிவு**
திரு. எம்.பி.என்.எம். விக்கிரமசிங்க, மேலதிக செயலாளர்

**கொள்கை மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு**
திரு. எம்.டப்ளியூ.ஜே. குமார, சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திருமதி. ஆர்.ஏ.டி.எஸ்.ஆர். ரணவக்க, சட்ட அதிகாரி

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**
திரு. வீ. பிரேமச்சந்திரன், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நாயகம்
திரு. ஐ.பி. விஜேரத்ன, பணிப்பாளர் (விளையாட்டு)

**இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்**
கலாநிதி துஷான் லலீஷ கஹட்டபிட்டிய, தலைவர்
திருமதி. டி.என்.ஏ.எஸ். மல்லவஆராச்சி, சட்ட அதிகாரி
திரு. எஸ்.எஸ்.பி. தர்ஷன கால்லகே, பணிப்பாளர்
திரு. கே.ஆர். கனகசபாபதி, மொழிபெயர்ப்பாளர்

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**
திரு. டப்ளியூ.கே.ஆர். குமார, உதவி விரிவுரையாளர்

**சட்டமா அதிபர் திணைக்களம்**
திரு. மனோஹர ஜயசிங்க, பிரதி மன்றாடி அதிபதி

**சட்டவரைஞர் திணைக்களம்**
திருமதி. எஸ்.எஸ்.எம்.டி.ஈ. வீரக்கோன், பிரதி சட்டவரைஞர்
திரு. ஜீ.கே. ஹேவாவித்தாரண, உதவி சட்டவரைஞர்

**அறிமுகம்**

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம் என்பது, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை ஒன்றை இலங்கையில் நிறுவுவதன் மூலம் அச் சமவாயத்தை இலங்கையில் அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும், அத்துடன் மேற்கூறிய சமவாயத்தின் கட்டமைப்பிற்குள் விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான பொருத்தமான உள்நாட்டுச் சட்டரீதியான பொறிமுறை ஒன்றை துல்லியமாகக் குறிப்பிடுவதற்காகவும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவுமான ஒரு சட்டமாகும்.

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதன் அடிப்படை நோக்கம் இலங்கையில் தூய்மையான மற்றும் நியாயமான விளையாட்டை உறுதிப்படுத்துவதாகும்.

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மை (World Anti-Doping Agency - WADA) இலங்கையில் விளையாட்டுகள் தொடர்பான ஊக்கு பதார்த்தப் பயன்பாடு குறித்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளையும் வருடாந்தம் மேற்பார்வை செய்வதோடு அதன் அடிப்படையில், நவீன விளையாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மையின் (WADA) சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய தற்போதுள்ள சட்டத்தை திருத்தம் செய்ய எதிர்பார்க்கிறது.

இலங்கை சர்வதேச மட்டத்திலான விளையாட்டுகளில் கலந்துகொள்ள எதிர்பார்ப்பின், தற்போதைய விளையாட்டுத் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தை திருத்தம் செய்வது மிகவும் அத்தியாவசியமானது என்று ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உலக முகவராண்மையினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**குழுவின் அவதானிப்புகள்**

- 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்தம் செய்யும்போது, "இலங்கையில் அல்லது வெளிநாட்டில்" என்ற சொற்களுக்குப் பதிலாக, புதிய சட்டத்தில் "இலங்கையில்" என்ற சொல்லைப் பிரதியிடுவதன் மூலம், ஊக்கு பதார்த்தம் எடுத்தல் சம்பந்தமான தவறுகளிலிருந்து ஒரு விளையாட்டு வீரரால் விடுபட முடியாது என்பதுடன் அத்தவறுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- முதன்மை சட்டவாக்கத்தின் திருத்தப்பட்ட 5 ஆம் பிரிவில் நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புக்கு தெளிவான ஏற்பாடுகள் இருப்பதுடன், நோய்களுக்காக சம்பந்தப்பட்ட பதார்த்தங்களைப் பாவிப்பதற்கு இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கொதிரான முகவராண்மையின் (SLADA) அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- முதன்மை சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள "நிர்வகிக்கும்" என்ற சொல்லுக்குப் பதிலாக "மேற்பார்வை செய்யும்" என்னும் சொல்லை பிரதியிட்டு திருத்தம் செய்வதன் மூலம், இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் நடவடிக்கைகளில் யாரும் தலையிடாத வகையில், அது சுதந்திரமாகச் செயற்படுவதற்கு வழிவகை செய்வதே எதிர்பார்க்கப்பட்டது.

**குழுவின் தீர்மானங்கள்**

பரிசீலனை செய்ததன் பின்னர், மேற்குறிப்பிட்ட சட்டமூலத்திற்கு குழு இணக்கம் தெரிவித்ததுடன், அது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட குழுவின் இந்த அறிக்கை, குழுவின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆராச்சி அவர்களினால் 2025 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தது.